1987 மார்ச் 10] [டாக்டர் கே. சமரசம்]

3. தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1969-70 முதல் 1975-76 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை.

4. 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1977-79) அளித்த ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் நாங்கள் எதிர்க்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I oppose the Bill at the Introduction stage itself. கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போகிற சட்டம் ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக வருகிறது. Comprehensive Legislation—பொதுவான ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி 10 வருடம் ஆகிவிட்டது. இப்போது ரூல்ஸ் கொண்டுவர வேண்டும் என்றால் அதற்கு எவ்வளவு காலம், 20 வருடம் ஆகுமோ என்னவோ தெரியவில்லை. அந்தக் காரணத்தைச் சொல்லி தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் 1976 ஆம் ஆண்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த ஜனநாயக அமைப்புகள் எல்லாம் கலைக்கப்பட்டு தனி அதிகாரிகள் போடப்பட்டு இருக்கிறார்கள். சட்டத்தைக் கொண்டு வருவதற்கு 10 வருடம், ரூல்ஸ் கொண்டு

வருவதற்கு இன்னும் 10, 20 வருடங்கள் என்று சொன்னால் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் தனி அதிகாரிகளுடைய தர்பார் நடக்கிறது, தவறுகளுக்கு வழி வகுக்கிறது. ஆகவே நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிப்பது என்பது கூட்டுறவுத் துறைக்கே நல்லதல்ல. ஆகவே, அமைச்சர் அவர்கள் மாறி மாறி வாக்குறுதி கொடுத்தாலும் அந்தத் தேர்தலைக் காலம் கடத்திப் போவது என்பது கூட்டுறவுத் துறையையே இன்றைக்குச் சீர்குலைக்கிற நிலைக்கு உள்ளாக்கு கிறது. எனவே, 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 9-ஆம் தேதிக்கு மேலே, மேலும் ஓராண்டு நீட்டிப்பது என்பதை மேலும் கடுமை யாக ஆட்சேபிக்கிறோம். ஆகவே, இந்தத் தேர்தலை இந்த ஆண்டே நடத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்பத்திலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அலுவலர்கள் நியமனத்தை மேலும் ஓராண்டு நீட்டிப்பதற்குக் கொண்டு வந் திருக்கின்ற சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க் கின்றேன். சென்ற ஆண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது இந்த ஆண்டுக்குள்ளாகக் கண்டிப்பாக நடத்து வோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை அரசு நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறேன். இதை சபை நிராகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், தனி அலுவலர் களுடைய பதவிக்காலம் 11 ஆண்டுகள் 10 மாதங்கள் வரை நீடிக்கப்படும் என்று சட்ட முன்வடிவிலே சொல்லப்படுகிறது. முன்னாலே 10 ஆண்டுகள் 10 மாதம் என்று சொல்லப்பட்டது. இப்படி ஒவ்வொரு ஆண்டாகச் சொல்லிச் சொல்லி, இப்பொழுது 11 ஆண்டுகள் 10 மாதங்கள் வரை நீடிப்பு என்று சொல் கிறார்கள். இந்துக்கள் சொல்வார்கள், மனிதனை 7 ஆண்டுகள் தான் சனியன் பிடிக்கும் என்று. ஆனால் கூட்டுறவுத் துறையில் சனியன் பிடித்து 11 ஆண்டுகள் 10 மாதங்கள் ஆகிறது. எப் பொழுது அதற்கு விமோசனம் கிடைக்கும்? அமைச்சர்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள்; ஆனால், தனி அதிகாரிகள் மட்டும் மாறாமல் நீடித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு சங்கடங்கள் ஏற்

பட்டுள்ளன. திருச்செங்கோடு மார்க்கெட்டிங் சொசைட்டியிலே ஒரு கிளையிருக்கிறது. ஸ்பின்னிங் பாக்டரி உள்பட இருக்கிறது. அங்கேயிருக்கிற பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 5 தான் கொடுக்கப்படுகிறது. குறைந்தபட்ச விவசாயக் கூலிகளுக்குக் கூட ரூ. 8 கொடுக்கப்படுகிறது. ஆனால், திருச்செங்கோடு மார்க்கெட்டிங் சொசைட்டியின் ஸ்பின்னிங் பாக்டரியிலே வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளர்களுக்கு, ஒரு நாளைக்கு 8 மணி நேரம், 10 மணி நேரம் வேலை செய்த பிற்பாடும் ரூ. 5 தான் கூலி கொடுக்கப்படுகிறது என்றால், போர்டுகள் இல்லாததால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்சிடரேஷனுக்கு வரும் போது அதைப் பேசலாம், விவாதத்திற்கு வரும்போது நிறைய பேசலாம்.

திரு. கோ. வீரய்யன் : விவசாயிகளுக்கு ஏராளமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மூலமாக, அந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த 11 ஆண்டுகள் 10 மாதங்களோடு முடியுமா என்பதற்கு அமைச்சர் வாக்குறுதி கொடுப்பாரா என்பதை அறிய விரும்புவதோடு, இதை ஆரம்பத்திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

திரு. த. பழனி : 'சனியன்' என்ற வார்த்தையைச் சொன்னார். அது அவைக்குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நாம் எல்லாம் உபயோகப்படுத்துகிற வார்த்தைதான். அதில் ஒன்றும் தவறு இல்லை.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக கட்டத்திலேயே இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் உண்மையிலேயே ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கும்படியான ஒரு உரிமையைப் பறிக்கும் திருத்தமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே ஏற்படும் சீர்கேடுகளைத் தடுப்பதற்கு இது எந்த வகையிலும் உபயோகப்படாது. ஆகவே, தேர்தலை நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்தும் முறையில் நான் இதை அறிமுகக் கட்டத்திலேயே ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத் தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஜனநாயகத்திற்கு விரோதமாக, தேர்தல் நடத்தப்படாமல், மீண்டும் மீண்டும் தனி அதிகாரிகள் பதவியை நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10—20)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம் என்பது விவசாயிகளுடைய சகலவிதமான உற்பத்திப் பொருட்களை வாங்குவதும் விநியோகம் பண்ணக்கூடியதுமான கூட்டுறவு அமைப்பாகும். இப்படிப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுத் துறை அமைப்பில் மற்ற கூட்டுறவுத் துறையில் ஏற்படும் பிரச்சினை களை அணுகுவது போல், பிரச்சினைகளை அணுகுதல் கூடாது. இப்படித் தனி அதிகாரிகளின் பதவிகளை நீட்டித்து வருவதால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே மக்கள் மேல் நம்பிக்கை வைத்துள்ள அரசு இப்படித் தனி அதிகாரிகளு டைய அதிகாரத்தை நீட்டித்துக் கொண்டே வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் செய்வதோடு, இந்த மசோதா வைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.